2010 நவம்பர் 10]

கொண்டிருக்கிறது. வெகு விரைவிலே காவலர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு அந்தக் காவலர்களுக்கான வசதிகள் சீர்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சி துணைத் தலைவர் என்ன சொல்லுங்கள்? Gist-ஐ மட்டும் சொல்லுங்கள். என்ன matter என்று முதலில் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: காலையில் உங்கள் அறையில் வந்து கொறடா சொன்னதுதான். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சி துணைத் தலைவர், இதுசம்பந்தமாக எனக்கு யாரும் தகவல் கொடுக்கவில்லை. அதை முதலில் தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) Gist-ஐ மாத்திரம் சொல்லுங்கள். திரு. செங்கோட்டையன்.

(ஆ) கரும்பு, பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி விவசாயிகள் போராட்டம்

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பாக இன்று சென்னை மாநகரத்தில் சட்டமன்றத்தின்முன் விவசாயிகள் மறியல் பேரணி நடைபெறும் என்று வேண்டுகோள் வைத்து, அது மாற்றியமைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின்முன் அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2010 நவம்பர் 10

விவசாயிகளினுடைய நிலைகளைப் பொறுத்தவரையிலும், பால் விலை கூடுதலாக வேண்டும் என்றும் கரும்புக்கு ரூ.2,000/-ம் அறிவித்தது அமல்படுத்தப்படவில்லை, இது ரூ.3,000/- ஆக உயர்த்தப்பட வேண்டுமென்றும், அதேபோல தேசிய வங்கிகளிலே இருக்கின்ற கடன்களை ஜப்தி என்ற முறையில் agents மூலமாக, அவர்கள் 10 பேர், 15 பேர் வந்து, அதிகாரிகள் இல்லாமலேயே எடுத்துச்செல்லுகிற நிலை தடுக்கப்பட வேண்டுமென்றும், டிராக்டர்களை அதேபோல புதிய மின் மோட்டார்கள் வழங்கப்படும் என்ற வாக்குறுதியைத் தந்து, பழைய மின் மோட்டார்களை எடுத்துச் செல்வதற்கு மின்சாரத் துறை முனைந்திருக்கிறது இதற்கு ஒரு தெளிவான முடிவை மேற்கொள்ள வேண்டும் என்பதை எல்லாம் வலியுறுத்துகின்ற வகையில் அவர்கள் மறியல் என்ற போராட்டத்தின் அடிப்படையில் இங்கே வருகை தந்திருக்கிறார்கள். அந்தப் போராட்டம் நடத்துவதற்கு முன்னால், அரசு அதைக் கூர்ந்து கவனித்து, அவர்களுடைய கோரிக்கைகள் என்ன, அதிலே என்ன நியாயங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து அவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன்.

முற்பகல் 10-50

(இ) பாலாற்றின் குறுக்கே கணேசபுரத்தில் ஆந்திர அரசு அணை கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே கணேசபுரத்திலே ஆந்திர அரசு 200 கோடி ரூபாயிலே அணையைக் கட்ட முற்பட்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதுசம்பந்தமாகக் கொடுத்திருக்கிறீர்கள். இது பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

2010 நவம்பர் 10]

(ஈ) கடலூர், பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர் கிராமம், இடிதாக்கி இறந்த மூன்று சிறுவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கடலூர் மாவட்டம், என்னுடைய பண்ருட்டி தொகுதியில் உள்ளடங்கிய வீரப்பெருமாநல்லூர் என்னும் கிராமத்தில் இடி தாக்கியதில் மூன்று சிறுவர்கள், பள்ளிக் குழந்தைகள் வீரமணி—வயது 15, சதீஷ்—வயது 10, முத்துராஜ்—வயது 15 ஆகியோர் அகால மரணம் அடைந்திருக்கிறார்கள். இந்தச் செய்தி நேற்றையதினம் அவையில் இருக்கின்றபோதே வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை இந்த அவையின்மூலமாக ஈர்த்து, என்னுடைய பண்ருட்டி தொகுதி வீரப்பெருமாநல்லூர் கிராமத்தில் இடிதாக்கி உயிரை நீத்த அந்தப் பள்ளிச் சிறுவர்கள், மூன்று குழந்தைகளின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நல்லதொரு நிதியினை வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிடவேண்டும் என்று இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(உ) பன்னாட்டுத் தொழில் நிறுவனத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் அமைக்க அனுமதி அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

***செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரில் தமிழகத்தில் இருக்கக்கூடிய பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களில் தொழிற்சங்கங்களை அங்கீகரிக்கக்கூடிய வகையில் ஒரு சட்டம் கொண்டு வருவதற்கான ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை தங்களிடம் வழங்கியிருக்கின்றோம். அதுகுறித்துப் பேசுவதற்கு நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அது பரிசீலனையில் இருக்கிறது. **

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் ஓர் உறுப்பினர் மீது மற்றோர் உறுப்பினர் குற்றச்சாட்டைச் சுமத்துவது என்றால், முதலில் பேரவைத் தலைவரிடத்திலே தெரிவிக்க வேண்டும். எந்த உறுப்பினர்மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறதோ, அந்த உறுப்பினருக்கு முதலிலே தெரிவிக்கப்பட்டு, பிறகுதான் அவர் பதில் சொல்ல வேண்டும். திடீரென்று இந்தச் சபையிலே எழுந்து ஓர் அமைச்சர் மீதோ அல்லது ஓர் உறுப்பினர் மீதோ ஒரு குற்றச்சாட்டு சுமத்தினால் திடீரென்று பதில் சொல்ல முடியாது. காரணம் என்னவென்று சொல்கிறேன். முதலில் யார் மீது குற்றஞ்சாட்டுவதாக இருந்தாலும் அவர்களுக்கு inform பண்ண வேண்டும். "உங்கள் மீது இந்தக் குற்றச்சாட்டு சுமத்துகிறோம், நீங்கள் இதற்குப் பதிலளிக்கத் தயாராக இருக்கிறீர்களா" என்று கேட்க வேண்டும். அதற்குப் பிறகுதான் நீங்கள் அனுமதிக்க வேண்டுமே தவிர, திடீரென்று இப்படிச் செய்வது நியாயமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், இதைத்தான் நான் நேற்று சொன்னேன். நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்பதை என்னிடம் முதலில் சொல்லிவிட்டு, என்னுடைய அனுமதியைப் பெற்றுவிட்டுத்தான் பேச வேண்டும் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 10]

*__மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர்மீது குற்றச்சாட்டு சொல்கிறபோது முதலில் தங்களிடத்திலே தெரிவித்து, ஆதாரங்களைக் காட்டி, தங்களுடைய அனுமதியைப் பெற்று, குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும். இந்த அவையில் வேறு எத்தனையோ பிரச்சினைகளை எழுப்புவதற்கு, அவசியம் இருக்குமானால், அந்தப் பிரச்சினைகளை எழுப்பலாமே தவிர, ஒரு குற்றச்சாட்டு சொல்கிறபோது தங்களின் அனுமதி பெறாமல் அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லியிருப்பாரேயானால் அது இந்த அவையில் இடம்பெறக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்கிறேன். விதி எண் 93-ஐ எடுத்துப் படித்துப் பாருங்கள். அதில் "ஒரு உறுப்பினர் எழுத்துமூலமாக முன்கூட்டியே பேரவைத் தலைவர், அமைச்சர் சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்குத் தெரிவித்தாலன்றி மற்ற எந்த உறுப்பினர் மீதோ அல்லது எந்த அலுவலர் மீதோ அவதூறாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ அவர் மீது குற்றம் சாட்டக்கூடாது. அவ்வாறு முன்னறிவிப்பு கொடுப்பது குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அதனைப் புலனாய்வு செய்து பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்க வேண்டும்" என்று specific ஆக விதி 93-ல் இருக்கிறது. நீங்கள் குற்றச்சாட்டைத்தான் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செய்தி இன்றைய நாளிதழில் வந்திருக்கின்றது. அந்தச் செய்தியை சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ** நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2010 நவம்பர் 10

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செய்தி தன்னுடைய காதுக்கு வந்தால்கூட, அது ஒரு குற்றச்சாட்டாக வடிவம் எடுக்கிறதென்று சொன்னால், அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டு அறிந்த பின்னர்தான் இந்த அவையிலே சொல்ல வேண்டும். வெளியிலே எத்தனையோ செய்திகள் வரலாம். அப்படி வருகிற செய்திகளையெல்லாம் இங்கே பதிவு செய்வதற்கு இது பதிவுத் துறை அலுவலகம் அல்ல. *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்னும் சொல்லப்போனால், இந்த அவையிலே உள்ள யாரையும் அவமதிக்கிற செய்தியை வெளியிலே யார் சொன்னாலும் அதை மறுபடியும் இங்கே வந்து சொல்வதற்கு தேவையான அனுமதி இந்த அவையிலே கிடையாது. அப்படி அவமதிக்கக்கூடிய, குறை சொல்லக்கூடிய ஒரு குற்றச்சாட்டு இருக்குமானால், முன்கூட்டி அதை அவைத் தலைவரிடத்திலே தெரிவித்து, அதற்கான ஆதாரம் காட்டிவிட்டு அதற்குப் பிறகுதான் இந்த அவையிலே சொல்ல வேண்டும். அப்படியல்லாமல் விதியை மீறிச் சொல்கிற செய்தி எதுவாக இருந்தாலும் இந்த அவையிலே பதிவு செய்யப்படக்கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என்ன சொல்கிறேனென்றால். . . *(குறுக்கீடுகள்)* அமைச்சர்மீது நீங்கள் குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் அதை முதலில் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். *(குறுக்கீடுகள்)* பேப்பரில் வந்திருக்கிறது என்று நீங்கள் சொல்கிறீர்களல்லவா! *(குறுக்கீடுகள்)* No, no. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, rule is very clear. ஆகையினால் நீங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் சொன்னதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கியிருக்க வேண்டும். அவர் என்ன என்பதை எழுதிக்கொடுக்கட்டும். Rule பிரகாரம் வரட்டும்; Rule பிரகாரம் face பண்ண நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகையினால், இப்போது அவர் கூறியதை அவைக்குறிப்பிலிருந்து எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

2010 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நான் rules—படிதான் நடக்கமுடியும். (குறுக்கீடுகள்) Rules—படிதான் நான் செய்யமுடியும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் கூறிய அனைத்து வார்த்தைகளும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான், முடிந்தது. (குறுக்கீடுகள்) இன்றைக்கு அவ்வளவுதான் (குறுக்கீடுகள்) இன்றைக்கு அவ்வளவுதான். Today, I have been very liberal. Please sit down. (குறுக்கீடுகள்) இல்லை, (குறுக்கீடுகள்)

(ஆ) கரும்பு, பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி விவசாயிகள் போராட்டம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, விவசாயிகள் பல கோரிக்கைகளை வைத்துப் போராடுவதாக மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் இங்கே இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்த அரசு, பொறுப்பேற்ற பிறகு சாதாரண இரக நெல்லுக்கு இப்பொழுது ஒரு குவிண்டாலுக்கு 1,050/- ரூபாயும், சன்ன இரக நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு 1,100/- ரூபாயும் வழங்கி வருவதை விவசாயிகள் பாராட்டி வரவேற்றிருக்கின்றார்கள். அதைப்போல கரும்புக்கு 9.5 கட்டுமானத்திற்கு 2,000/- ரூபாய் வழங்கி வருவதையும் விவசாயிகள் பாராட்டி வரவேற்றிருக்கின்றார்கள். நம்முடைய இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்திலே தந்த வாக்குறுதிப்படி, கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கிய கடன் 7,000 கோடி ரூபாயும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகள் பயிர் செய்வதற்காக கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கக்கூடிய கடனுக்கு வட்டி இல்லை என்றும் அறிவித்திருக்கின்றார்கள். அதைப்போல பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் 2008—லிருந்து இதுவரை 973.85 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு இந்தக் காப்பீடு மூலம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கொடுத்த கடனுக்காக டிராக்டர்